வேம்பின் புல்லுருவித் தயிலம்.

வேம்பின் வேர் புல்லுருவியைக் கொண்டு வந்து பத்து பலம் இடித்து மிடாவில் போட்டு எட்டொன்றுக் காய்ச்சி வடித்துக் கொண்டு நல்லெண்ணை படி இரண்டு ஓமம் பலம் ஒன்று, வசம்பு பலம் ஒன்று, திப்பிலி பலம் ஒன்று, கண்டங் கத்திரி பலம் ஒன்று, வேளை விதை பலம் ஒன்று, கடுகு ரோகணி விராகனிடை ஒன்று கார்போகரிசி விராகனிடை பலம் கால், வெங்காரம் பலம் கால், கோஷ்டம் பலம் கால், மாசிக்காய் பலம் கால், செவ்வியம் பலம் கால், இந்துப்பு பலம் ஒன்று, சார மண் ரசம் படி ஒன்று, இது வெல்லா இடித்து என்ணையில் போட்டு அஞ்சா விறகு கொண்டு எரியிட்டு மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு உள்ளுக்கு வீசம் என்ணெய் வாங்கவும். தலைக் கிட்டு முழுகி வரவும். கபாலத்து நீரெல்லாம் போகும். முக வாதம், முக சன்னி, தலைப் புரு, பாலகாசம், பிடரி வலி, மேல் குத்தல் இடுப்ப நோய்கள் வாதம் என்பதும் பித்தம் நாற்பதும் சிலேற்றுமம் இருபதும் சன்னி யெல்லாம் தீரும்.

பத்தியம் :- உப்பு. புளி விடவும்.

தவசி முருங்கைத் தயிலம்.

தவசி முருங்கை கொண்டு வந்து பத்து பலம் இடித்து மிடாவில் போட்டு தண்ணீர் விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி எடுத்துக் கொண்டு நல்லெண்ணை படி இரண்டு கத்தாழைச் சோறு பலம் ஒன்று, ஏலம் பலம் ஒன்று, காஞ்சீரகம் பலம் ஒன்று, சீரகம் பலம் ஒன்று, அதிமதூரம் பலம் ஒன்று, மிளகு பலம் ஒன்று, கத்தரி மஞ்சள் பலம் ஒன்று, பூலாங் கிழங்கு பலம் ஒன்று, விலாமிச்சை வேர் பலம் ஒன்று, கோஷ்டம் பலம் ஒன்று, இது வெல்லாம் இடித்து என்ணையில் போட்டு விறகு கொண்டு எரியிட்டு மெழுகு பதத்திலிறக்கி கொண்டு உள்ளுக்குக் கொண்டு, தலைக்கிட்டு முழுகி வர வன்மை சேரும், கிரந்தி பொடு குட்டம், பில்லி சூனியம்; வயிற்றில் மருந்தீடும் சிரங்கு கரப்பான், கழலை படுவான். அரையாப்பு பித்த கரலை; தேகக் கரணை, வாதகிரணை, உடம்பிளைத்தல் வயிறு பொருமல் அக்கினி மந்தம், சென்கைக் கட்டு, பக்கக் கட்டு, அண்ட வீரம் ஆனந்த வாய்வு இதுவெல்லாந் தீரும்.

பத்தியம்:- துவரைப் பருப்பு, செஞ்சோளச் சோறு உண்ணவும். பசுவின் நெய், தயிர் கூட்டவும். இந்தத் தயிலத்தில் இஞ்சிச் சாறு கூட்டி தின்ன ஈளை இருமல், இழுப்பு தீரும். விக்கலிலே தோன்றிய சுரம் விடும். அவ பத்தியம் காக்கவும்.

மொசு மொசுக்கைத் தயிலம்.

மொசு மொசுக்கை சமூலம் கொண்டு வந்து இடித்து மிடாவில் போட்டு குறுணி தண்ணீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு நல்லெண்ணை படி இரண்டு, நெல்லிக்காய் சாறு படி ஒன்று, விளாநெல்லிச் சாறு படி ஒன்று, தானிக்காய் விராகனிடை ஐந்து, சாதிக்காய் விராகனிடை ஐந்து, ~~சாதிக்காய் விராகனிடை~~ ஐந்து, சீரகம் விராகனிடை ஐந்து, மிளகு விராகனிடை ஐந்து, திப்பிலி விராகனிடை பத்து, அதிமதுரம் விராகனிடை ஐந்து, பற்படாகம் விராகனிடை நான்கு இது வெல்லாம் இடித்துப் பசுவின் பால் விட்டரைத்து எண்ணெயில் போட்டு அரசன் விறகு கொண்டு எரியிட்டுக் கடுகு பதத்தில் இறக்கி வைத்து கொண்டு கெஜமுகன் பூசை செய்து உள்ளுக் கொண்டு தலைக்கிட்டு முழுகி வர வன்மை கேளு. பித்த ரோகம், பித்த வாதம், பித்தத்திலுண்டான ரோகங்கள், தீரும். வாய் வழவழப்பு, நெஞ்சு நோய்கள், வயிற்று வலி பித்த வாய்வு, பித்த சுரத்துக்கு மொசு மொசுக்கை கஷாயத்தில் கொடுக்கவும். உப்பு, புளி, புகை விடவும்.

பச்சை மூங்கில் தயிலம்.

பச்சை மூங்கில் கொண்டு வந்து சிறுக நறுக்கி மிடாவுக்குள் போட்டு குழி வெட்டி குழிக்குள்ளே கலசம் வைத்து அதன் மேலே மிடாவை வைத்து சீலை மண் செய்து மேலே சட்டி கொண்டு மூடி வெரு வடிக்கி கெஜ புடம் போட்டு நாற்பது நாழிகைக்குப் பிறகு எடுத்துப் போடவும். தயில மிறங்கி நிற்கும்.

தயிலத்திலே கூட்டும் மருந்து:- பெருங்காயம் விராகனிடை பத்து, அக்கிலா காரம் விராகனிடை பத்து, கோஷ்டம் விராகனிடை ஐந்து, நாலு, வெள் வெங்காயம் விராகனிடை நாலு, இந்துப்பு விராகனிடை நாலு இது வெல்லாம் இள வருப்பாய் வறுத்து சூரணம் செய்து தயிலத்தில் கலக்கி கொண்டு சர்வாங்கத்தில் தவளையிடத் தீரும் வியாதி கேள்:- சர்வாங்க வாதம், முடக்கு வாதம், சந்து வாதம், முழங் கால் வாதம், நரித் தலை வாதம், எண்பது பித்தம், நாற்பது சேற்றம மிருபது சன்னி பதினெட்டு வாத வாயுவு, வாதச் சன்னி விகாரச் சன்னி, நடுக்கு வாதம் சன்னி, சர்வாங்க வாதம், பித்தம் கிறுகிறுப்பு இதுவெல்லாம் தீரும். பத்தியம் புளி, புகை, விடவும்.

சர்வ ஜன்னி சுரங்களுக்கு மருந்து.

காட்டு முருங்கைப் பட்டை, கொறுஞ்சி, முட் கொளுஞ்சி, குரங் காட்டுக் கொளிஞ்சி, காட்டெலிமிச்சன் வேர், தூதுவிளா வேர், கண்டங் கத்திரி வேர், நன்னாரி வேர், வரிக்கும் மட்டி வேர், பன்னை வேர், நிலப் பனை வேர், கிழங்கு, காட்டவரை வேர், சித்திர வேர், மூலம் பலம் பத்து சிறுகுறிஞ்சா வேர், உகாரம் வேர், தாத்தொட்டி வேர், வில்வ வேர், பொருமி வேர், பேராமுட்டி வேர், மலைதாங்கி வேர், முள்ளி வேர், நொச்சிப் பட்டை, மொசு மொசுக்கை வேர், வேலிப் பருத்தி வேர் சாரணை வேர், விஷ்ணு கிரந்தி, பெருங்காயம், விராகனிடை ஒன்று; வெள் வெங்காயம் விராகனிடை ஐந்து, திப்பிலி விராகனிடை ஐந்து, சுக்கு விராகனிடை இரண்டு, மிளகு விராகனிடை ஒன்று, தேசாவரம் விராகனிடை ஐந்து, வாய் விளங்கம் விராகனிடை இரண்டு, வெட்பாலையரிசி விராகனிடை இரண்டு, கார்போகயரிசி விராகனிடை இரண்டு, கம்பிளிப் பிசின் விராகனிடை ஐந்து, ஓமம் விராகனிடை இரண்டு, அக்கிலாக் காரம் விராகனிடை இரண்டு, சமுத்திராப் பழம் விராகனிடை இரண்டு, கோஷ்டம் விராகனிடை நாலு, கடுகு ரோகணி விராகனிடை நாலு; சித்தரத்தை விராகனிடை இரண்டு, இஞ்சி பலம் கால், இந்துப்பு விராகனிடை இரண்டு, மாசிக்காய் விராகனிடை இரண்டு, தானிக்காய் விராகனிடை ஐந்து, ஆனைத் திப்பிலி விராகனிடை நாலு, சதகுப்பை விராகனிடை நாலு, இது வெல்லா இடித்துச் சூரணம் செய்து பெருமரத்துப் பட்டைச் சாறு பெரும் பட்டைப் பனைரிச் சாறு, இந்த இரண்டு சாறும் விட்டரைத்து சுண்டைக் காயளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு

ஒரு குளிகை இஞ்சிச் சாற்றில் கொடுக்க சேற்றும் சன்னி பித்த சன்னி வாத சன்னி தீரும்.

பத்தியம்:- வென்னீரும், சோறும் தின்னவும். வசம்பு, வேப்பம் பட்டை, மிளகு, கஷாயம் இட்டுக் கொடுக்க சீத சுரம் விஷ சுரம் பித்த சுரம் வாத சுரம். இருமல் குளிர் சுரம், இதுவெல்லாம் விடும். ஓமக் கஷாயத்தில் வயிறு பொருமல் சீதக் கட்டு பல வாய்வு, மூல வாய்வு தீரும். சித்திர மூலக் கஷாயத்தில் சன்னி முசல் வலிப்பு பிடரி வலிப்பு, மரண வலிப்புகளும் தீரும். செம்போத்துக் கண்ணும் நெல் தவிடும் கூட்டித் தின்ன க்ஷயம் மருந்திடு உதிரச் சன்னி குதிரை வலிப்பு தீரும். கண்டங் கத்திரி சுக்கு மிளகு திப்பிலிக் கஷாயமிட்டு கொடுக்கக் குளிர் சுரம் தீரும். வாத சுரத்துக்கு நல்ல துளசி நாய்த் துளசி வேப்பம் பட்டைக் கஷாயத்தில் கொடுக்கவும். சேற்றும சுரம் கடிப்புக்கு இஞ்சிச் சற்றில் கொடுக்கவும். பித்த சுரத்துக்கு மொசு மொசுக்கை கஷாயத்தில் கொடுக்கவும். மலை தாங்கி வேர் நீல வேர்க் கஷாயத்தில் கொடுக்கவும். தோஷ சுரத்துக்கு முருங்கைப் பூ மிளகு ஓமம், பெருங்காயம் திப்பிலி அரைத்து குளிகை கூட்டிக் கொடுக்கவும். சிறு தோஷத்துக்கு முலைப் பாலில் கொடுக்கவும். அஸ்தி சுரத்துக்கு நிலப் பனைக் கிழங்குக் சூரணத்தில் கொடுக்கவும். தாப சுரத்துக்கு வேப்பிலைக் கஷாயத்தில் கொடுக்கவும். விஷ சுரத்துக்கு விஷ மல்லிகை சாற்றில் கொடுக்கவும். பயித்திய சுரத்துக்கு வில்வ வேர் கஷாயத்தில் கொடுக்கவும். விரண சன்னிக்கு ஆதண்டச் சாற்றில் கொடுக்கவும். விடா சுரத்துக்கு விஷ்ணு கிரந்தியில், வில்வ வேர், சுக்கு, மிளகு, திப்பிலிக் கஷாயத்தில் கொடுக்கவம். வாய் நீரேலுக்கு வென்னீரில் கொடுக்கவும்.

சர்வ சுரத்துக்கு குமரித் தயிலம்.

கத்தாழை வேர் கொண்டு வந்து சிறுக நறுக்கி மிடாவில் போட்டு பதக்கு நீர் விட்டு எட்டொன்றாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு நல்லெண்ணை படி இரண்டு மொசு மொசுக்கை சாறு படி ஒன்று, இஞ்சிச் சாறு படி ஒன்று, நல் வேளைச் சாறு படி ஒன்று, இது வெல்லாம் எண்ணையில் போட்டு கடைச் சரக்கு அக்கிலா காரம் விராகனிடை ஐந்து, கடுகு ரோகணி விராகனிடை ஐந்து, சீரகம் விராகனிடை ஐந்து, சாதிக்காய் விராகனிடை ஐந்து, பெருங்காயம் விராகனிடை ஐந்து, வெட்பாலையரிசி விராகனிடை ஐந்து, ஏலம் விராகனிடை ஐந்து, மிளகு விராகனிடை ஐந்து, நெல்லி வற்றல் விராகனிடை ஐந்து, கோஷ்டம் விராகனிடை ஐந்து, திப்பிலி விராகனிடை ஒன்று, திப்பிலி மூலம் விராகனிடை ஒன்று, இது வெல்லாம் பசுவின் பால் விட்டரைத்து எண்ணையில் போட்டு விள்ளாம் பிறகு கொண்டு எறியிட்டு மெழுகு பதத்தில் வடித்துக் கொண்டு தலைக்கிட்டு முழுகி வர உள்ளுக்கு காசிடை கொள்ள இதுக்குத் தீரும் வியாதி கேள். பித்த ரோகம், பித்த வாய்வு, பித்த குன்மம், தலை சுற்றி வருகிற பித்தம், அக்கினி வாயு, வலி குன்மம், வயிற்றுப் பொருமல், பயித்திய சன்னி, உன் மாதம் பயித்தியம், உம் மாதப் பித்தம் விகாளச் சன்னி இவை எல்லாம் தீரும். பத்தியம் உப்பு, புளி, புகை அவ பத்தியம் காக்கவும்.

கண்டங் கத்திரிச் சூரணம்.

கண்டங் கத்திரி சமூலம் கொண்டு வந்து உலர்த்தி இடித்து திப்பிலி பலம் கால், மிளகு பலம் கால், சுக்கு பலம் தால், தாளிச பத்திரி பலம் கால், இந்துப்பு பலம் கால், அக்கிலாகாரம் பலம் கால், சிறு நாகப்பூ பலம் கால், கோஷ்டம் பலம் கால் இது வெல்லாங் கூட்ச் சேர்த்து இடித்து வைத்துக் கொண்டு கொம்பத் தேனில் கொள்ள உடனே கொம்புத் தேன் விட்டு லேகியம் செய்து கழச்சிக் காய் மாதிரி உருண்டை செய்து கலசத்தில் வைத்துக் கொண்டு விநாயகருக்குப் பூசை செய்து வைத்துக் கொண்டு உள்ளுக்குக் கொள்ளவும். இதுக்குத் தீரும் வியாதிகள்:- மேக வெட்டை, உஷ்ண ரோகம், தொன்னூற்று பித்த ரோகம், நாற்பத்தாறு சிலேற்றும ரோகம், பதினறு வாத ரோகம்
226 அக்கினி மந்தம், மல வாய்வு ஆனந்த வாய்வி குன்ம வாய்வு, வலி குன்மம் பித்த குன்மம்,

விந்து தண்ணீர் உடைந்து போவது; கமலத்தில் சூடு வயிற்று வலி, சோகை கட்டு காசம் விக்கல், வெள்ளைக் காசம், ரத்தக் காசம், பித்த வாத காசம் யீழை இருமல் தீரும்.

பத்தியம்:- பால், நெய், தயிர் ஏராளமாய்க் கூட்டவும். சகல வியாதியும் தீரும். சயித்திய க்ஷய யிருமல், சிலேற்பன கோழை, பித்த யிருமல், மேலிழைப்பு, தீராத் விக்கல் ஏங்கல் ஏங்க யிருமல் தீரும். பசுவின் நெய்யில் கொள்ள அக்கினி மந்தம் வயிறு பொருமல் சுவாசம் நெஞ்சு கட்டும் ஈழை நோய்கள் சிலேற்பன இளைப்பு இவைகள் எல்லாம் தீரும். பத்தியம் துவரைப் பருப்பு, மிளகு, கறி கூட்டவும். உப்பு வறுத்துப் போடவும். பசுவின் நெய் தயிர், பால் மோர் கூட்டவும்.

வாதக் குடோரிக் குளிகை.

சித்திர மூலம் பலம் பத்து, ~~மிள~~ மிளகு பலம் ~~பத்து~~, ஒன்று, காட்டு முருங்கைக் கிழங்குப் பலம் மூன்று இது மூன்றையும் போட்டு முருங்கைச் சாற்றில் பெரு மரப்பட்டைச் சாறு பிழிந்து தழைச் சாறு விட்டரைத்து தும்பைப்பூச் சாற்றிலரைத்துச் சுண்டைக் காயளவு உருண்டை செய்து நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு ஒரு குளிகை திப்பிலிக் கஷாயத்தில் கொடுக்க பித்த சுரம், சீத சுரம், தீரும், குளிர் சுரத்துக்கு திரிபலைக் கஷாயத்தில் கொடுக்கவும் வாதசுரம் குளிர் சுரம் சிலேற்பன சுரத்துக்கு ~~இஞ்சி~~ மொசு மொசுக்கை கஷாயத்தில் கொடுக்கவும். வாத சுரத்திற்கு துளசிக் கஷாயத்தில் கொடுக்கவும். சிலேற்பன சுரத்துக்கு இஞ்சிச் சாற்றில் கொடுக்கவும். அவிகாத சுரத்துக்கு நெல்லி வத்தல், திரிகடுகு, திரிபாலைக் கஷாயத்தில் கொடுக்கவும். அக்கினி சுரத்துக்கு சுக்கு மிளகு கருஞ் சீரகம் கஷாயத்தில் கொடுக்கவும். பித்த வாத சுரத்துக்கு பேய்ப்புடல் மொசு மொசுக்கை சுக்கு, மிளகு திப்பிலி, தேவதாரம், வாய் விளங்கம், கஷாயத்தில் கொடுக்கவும். சிலேத்தும பித்த சுரத்துக்கு சிறு தேக்கு பற்படாகம் சீந்தித் தண்டு தும்பை சுக்கு, மிளகு, கஷாயத்தில் கொடுக்கவும். சர்வ சுரங்களுக்கு சிறு காஞ்சொறி வேர், வேப்பீர்க்கு, புளியீர்க்கு, இஞ்சிக் கஷாயத்தில் கொடுக்க எந்த விதமான சுரங்களும் தீரும்.

மாதளங்காய்ச் சூரணம்:

மாதளங்காய் கொண்டு இடித்துச் சூரணம் செய்து எருமைத் தயிரில் கொடுக்க வயிற்றுக் கடுப்புத்தீரும். வெந்நீரில் கொடுக்க ரத்தக் கடுப்புத் தீரும். பசுவின் நெய்யில் கொடுக்க அதிசாரக் கழிச்சல் தீரும். அதிசாரக் கழிச்சலுக்கு மாம்பட்டை விரி பட்டை, அத்திப் பட்டை, இது மூன்றும் துவைத்துப் பிழிந்து சூரணமும் கூட்டி கொடுக்கத் தீரும். ரத்தக் கடுப்புக்கு எருமைத் தயிரில் கொடுக்கவும். சீதக் கடுப்புக்கு வெந்நீரில் கொடுக்கவும்.

வேறு.

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, சித்திர மூலம் இவைகளைச் சூரணம் செய்து அதிசாரக் களிச்சலுக்கு வெந்நீரில் கொடுக்க உடனே நிற்கும். எருமைத் தயிரில் கொடுக்க ரத்தக் கடுப்பு சீதக் கடுப்பு நிற்கும். உள் மூலம் புற மூலம் வயிற்று வலி இவை. யெல்லாம்தீரும்.

வேறு.

மாம்பட்டை, அத்திப் பிஞ்சு, அத்திப் பட்டை, பிரத்திக் காய் மாதளங்காய், புழுங்கலரிசி, கூடப் போட்டு ஆட்டி புட்டாக்கி மூன்று நாள் தின்ன. தீரும்.

வேறு.

அத்திப் பிஞ்சும், மாதளங்காய் மாம்பட்டை இது மூன்றையும் கூட்டி பழச் சாறு விட்டுக் கலக்கி. எருமைத் தயிரில் கொடுக்க ரத்தக் கடுப்பு சீதக் கடுப்பு வயிற்று வலி, அதிகாரக் கழிச்சல் தீராத களிச்சலும் தீரும்.

வேறு.

செம்புலாங் கிழங்கு எருமைத் தயிரில் தொடுக்க வாதம், கடுப்பு தீரும், பத்தியம் துவரைப் பருப்பு மிளகு நீரும் கூட்டவும். புளி, புகை விடவும்.

சர்வ சூலைக்கும் மருந்து.

சீந்தித் தண்டு கொண்டு வந்து இடித்து ரசம் அரைப்படி வாங்கி சீனிச் சர்க்கரை கூட்டிக் குடிக்கவும். தீராத கை கால் முடங்கின சூலைக் கட்டு பறங்கிச் சூலை உடலக்கை புண் வியாதி, வயிற்றிலுண்டான கிரந்திப் புண், புண் பொடிகளும் தீரும்.

பத்தியம்:- உப்பு, புளி விடவும். கடுகு, மிளகாய் ஆகாது, கிரந்திப் பண்ட மாகாது, அவ பத்தியம் காக்கவும். கடகரை பளு வரை நெஞ்சு மாதேவி உழ மாந்தைக்கு சிறு முத்து எண்ணெ வைத்துக் கொடுக்கவும்.

மதன காமேசுர லேகியம்.

கஞ்சா பலம் இரண்டு பசுவில் பால் படி நாலு, கஞ்சாவை ஆவின் பாலில் ஊரப் போட்டு எடுத்து நிழலில் போட்டு உலர்ந்த பின்பு பசுவின் நெய் படி இரண்டு சட்டியில் வார்த்தில் அதில் கஞ்சாவை போட்டு அடுப்பேற்றிப் பொன்னிறமாயிறக்கி கொண்டு பூமிச் சர்க்கரைக் கிழங்கு பலம் இரண்டு நிலைப் பனை கிழங்கு பலம் மூன்று, சீரகம் பலம் இரண்டு, மிளகு பலம் இரண்டு, புனைக் காலி விரை பலம் ஒன்று, சாதிக்காய் பலம் இரண்டு, ஏலம் பலம் கால், சாதிப் பத்திரி பலம் கால், தாளிச பத்திரி பலம் நாலு, கிராம்பு பலம் கால், அதிமதுரம் பலம் கால் கோஷ்டம் பலம் கால் இவெல்லாம் சூரணம் செய்து சீனிச் சர்க்கரை பலம் நாலு சூரணத்துடன் கலந்து கொண்டு கஞ்சாவை அரைத்து நன்றாய் சூரணத்திலே போட்டு நெய் கூட விட்டுப் பதமாய்க் கிளறி பதமானவுடனே கொம்புத் தேன் கூட விட்டு லேகியஞ் செய்து கழஞ்சுக் காய் பிரமாணம் உருண்டை செய்து கலசத்தில் வைத்துக் கொண்டு விநாயகர் பூசை செய்து வைத்துக் கொண்டு உள்ளுக்கு சாப்பிடவும். இதுக்குத் தீரும் வியாதி கேள். மெக வெட்டை, உஷ்ண ரோகம், பித்த ரோகம், சிலேற்றும ரோகம், வாத ரோகம், அக்கினி மாந்தம், மல வாய்வு, ஆனந்த வாய்வு குன்ம வாய்வு, பித்த குன்மம், விந்து நீறிது பித்த காசம், ஈளை யிருமல், விக்கல் வெள்ளைக் காசம் ரத்தக் காசம், பித்த வாத காசம் தீரும்.

பத்தியம்:- பால், நெய், தயிர், ஏராளமாய் கூட்டவும். சகல வியாதியும் தீரும்.

சகல சுரத்துக்கும் கஷாயம்.

சித்திர மூலம், திப்பிலி, சுக்கு, மிளகு, வெள் வெங்காயம், சீந்தி தண்டு, பற்படாகம், வில்வ வேர், கண்டங் கத்திரி ஆடா தோடை பேய்ப்புடல், மொசு மொசுக்கை கோரைக் கிழங்கு வெள்ளைச் சாரணை வேர், இது வெல்லாஞ் சட்டியில் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு கஷாயம் வைத்துக் கொடுக்கவும். சர்வ சுரமும் விடும். மேலும் வீசுமாலுல் பசுவின்கோமயம் கஷாய மிட்டுக் கொடுக்க வயிறு பேதியாகும். வீக்கம் வற்றிப் போகும். சர்வ சுரமும் நீங்கும்.

மருந்துக்குப் பத்தியம்:- உப்பு, புளி புகை விடவும்.

நீரழிவு பிரமேகத்துக்கு.

சீந்தித் தண்டு, நாலு சுமை கொண்டு வந்து மேல் தோல் அறுத்துப் போட்டுத் துவைத்து பனையில் போட்டுக் கரைத்து பிழிந்து பொட்டு வடிகட்டித் தெளிவிலிருந்து போட்டு அடியிலிறங்கின சர்க்கரை யெல்லாம் எடுத்துக் கொண்டு இந்த சர்க்கரைக்குச் சமன் தேத்தாங் கொட்டையை உலர்த்தி இடித்துப் பொடி பண்ணி இது இரண்டும் சமனாகக் கூட்டி கொம்புத் தேனில் குழைத்துத் தின்னவும். நீரழிவு, வெகு சலக் கழிச்சல், மகா மேகம் இருபத்தொன்றுந் தீரும். இச்சாப் பத்தியமாயிருக்கவும்.

அண்ட வாதத்துக்கு மருந்து.

ரச கற்பூரம் வென்னீரிலரைத்து அண்ட வாதத்தின் சேத்தில் தடவவும், வத்திப் போகும் கழல் வாதத்துக்கு கழச்சிப் பருப்பு சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடையம், சீரகம், கருஞ் சீரகம், ஓமம், கடுக்காய், தானிக்காய், நெல்லி முள்ளி, பெருங்காயம், இது வெல்லாம் சமனுய்க் கூட்டி சூரணம் பண்ணி உள்ளுக்குக் கொள்ளவும். அண்ட வாதம் கழல் வாதம் இது வெல்லாம் தீரும்.

புண்ணுக்கு மருந்து.

சவுக்காரம், விராகனிடை ஒன்று, வெங்காரம் விராகனிடை ஒன்று, சீனிக்காரம் விராகனிடை ஒன்று, பச்சை வெட்டு விராகனிடை ஒன்று, துத்தம் விராகனிடை ஒன்று, ஆக இவை ஐந்தும் மருந்து நல்ல கொட்டைக் குழலுக்குள்ளே போட்டு மேலே எருமைச் சாணம் மேல் அப்பி தீயில் போட்டு சாணி கரிக்கிறதுக்கும் பிறகு எடுத்து அதை உடைத்து அதுக்குள்ளே யிருக்கிற மருந்தை எடுத்து பருத்தி லாந்தாழைச் சாறு விட்டு அரைத்து குளிகை செய்து கொண்டு புண்ணுக்கு மறுபடி பருத்தி லாந்தழைச் சாறு பிழிந்து குளிகையையுரைத்து புண்ணுக்குப் பஞ்சு போடவும். ஒரு நாள் விட்டு ஒரு நாள் போடவும். புண் ஆறிப் போகும்.

பத்தியம்:- கிறந்திப் பண்டமாகாது.

ரச பற்பம்.

போமென்ற பற்ப மொன்று சொல்லக் கேளு
புகழாக சுத்தி செய்த ரசம் பலந்தானென்று
ஆமென்ற கட்டுள்ளிக் கெந்தகமுங் கூட்டி
அடவாகத் தயில மது யிறக்கிக் கொண்டு
வேமென்ற ரசத்தில் விட்டு ஆட்டியாட்டி
வெய்யலிலே வைத்தவுடன் நீரும் பாகு
தாமென்ற தயில்ம்வட்டாட்டி வில்லை
சாதகமாய்க காய்ந்த பின்பு புடத்தில் வையே.

வையப் பாகுக் கிடமாமிடை போகாது
வாயிலே கட்டாது ரச கற்பூரம்
செயய்ப்பா குட்ட மொடு கிறந்தி சூலை
திறமான சூலை வகை யெல்லாம் போகும்
மெய்யப்பா புண் வகைகள் எல்லாந் தீரும்
வெறுப்போடு சீக முதல் வியாதி தீரும்
கையப்பா வண்டு கடி பினி சந்தீரும்
திகபாலத்தில் சூலை பவுடததிரமும் தீரும்
பையப்பா புத்து வகை கறலைக் கட்டு
பறக்குமா ரச ம்பற்பம் பரிந்து செய்யே.

தூதுவளை லேகியம்.

பரிவாக யின்ன மொரு லேகியங் கேளு. பாங்கான தூதுவளை, வேர், சங்கம் வேர், தெரிவான கண்டங் கத்திரியின் திருபிலை சிறு வழுதலையின் வேரும், வழிவான திரி கடுகு, வசம்பிருேடும், உத்தமனே முல்லை வேர் அமுக்கிராம் வேர், நரிவிறட்டி செம் முள்ளி கீழ்க்காய் நெல்லி நல்மாக வகை யொன்று பல மொன்றுமே. ஒன்றுன சூரணித்து வைத்துக் கொண்டு ஒரு படி தான் தூதுவளைச் சாறு பிரமிச்சாறும் ஒரு படிதான் பன்றுன சங்கன் சாறு ஆடா தோடை பரிவான முக்கு முலை பண்ணி வில்லை நன்றாக கொடி வேலிவேர் கூஷர்யமாக நலமாக வகையொன்று பல மொன்றுக ஒன்றுன சாறெல்லாம் ஒன்றித்து விட்டு உத்தமனே பாகு பதம் வரு நேரத்தில் வருநேரஞ் சூரணத்தை யிட்டுக் கிண்டி மகத்தான மெழுகு பதமான போதே குருவான பாதம் போற்றி

பதனமாய் வைக்க கொடிதான நோய் தனக்கு. கழஞ்சி இரண்டு உருவான தாளிக பற்பம் சூத பற்பம் உரைப்பாக பணவிடை தான் லேகியத்தில் கொள்ளே.

கொள்ளவே பாலொடு சிறு பயறு மாகும் கொண்ட பின்பு. க்ஷய ரோகம் சூலை குட்டம் வெள்ளென்ற வெருப்பு முதல் யிழைப்புக் கக்கல் விக்ஷ. கடியும், குறை நோயும் மீளும். தன்னையென்ற சூத பற்பம் தாளக பற்பம் தடையரவே சன்னுமடா தாக்கிப் பாரு பிள்ளை யென்று நோயாளி பணிவதில் பிணி தீரும். மீறிப் பறிக்கும் பாரே. பிசகாமல் வைத்தியற்கு மனம் நோகாமல் பேணியே கொண்டாக் கால் பிசகேயில்லை. அசகாமல் கர்மங்கள் நிவர்த்தி செய்து அரிபூசை சிவ பூசை அன்ன தானம் மசகாமல் செய்து கொண்டு மருந்தைத் தின்று கத்தான தைல மொன்று சொல்லக் கேளு.

26.7.62.

உத்கடத்துக்கு தயிலம்.

வசுமான வேப்புரிசி அழிஞ்சி வித்து மாவிலங்க வித்துடனே முருக்கன் வித்து

வித்தான கும்மட்டி வத்து முருங்கை வித் தகரை வித்து வில்வ வித்து
முதத்தான ஆமணக்கு பேரான வித்து முருங்கை வித்து திருபாலையின் வீசியெடு
பத்தான கொடி வேலியும் தைத்தான் பட்டை
பறங்கிப் பட்டை செங்கொட்டை கார் கோலரிடு
மத்தான ஊமத்து வாலுளுவை வித்து
வாகான தகரையுடன் சிவனார் வேம்பு.

வெம்மான கருஞ் சீரகம் வகை யொன்றுக்கு
வெள்ளருகு வேருடனே வேர் தோன்றியாக
நாம்பான பல மொன்று குழித் தயிலம் வாங்கி
நறு நெய்யும் நல்லெண்ணை நாழி
சொம்பான தயிலமது நாழியாகத்
துடியாக அடுப் பேற்றை வைத்துக் கொண்டு
பாம்பான குட்டம் தினெட்டுக்குப்
பரிவாக மெய் பூசி மண்டலத் திப்பிதில் பாரேநு

பாரடா சட்டை யொன்று கழன்று தள்ளும்
பசும் பொன் போலத் தேகமுமாம் பரிந்து காணவும்
நேரட்டானமுன் சொன்ன தயிலம் முழுகு
வார்த்தையடா சுருக்கு மெத்தக்
காரடாகு விரட்ட பார்த்தந் தன்னை
கதி கெட்ட நோயாளி நோய் தீராவென்றால்
ஊறடா யிருக்கின்ற வயித்தியற்கு
உறுதியுள்ள தங்கமடா இந்த நூலே.

நூலிலே வாதம் வந்த வகை தானேது
நுண்ணிமையாய் கிரமத்தில் வகையைக் கூறு
கனிகாவிலே தோன்றியது கடுப்பதேது
கை கால் முடங்கியது வீக்க மேது
கோலிலே பல பூடு விருக்ஷமான
குருந்த மரந்தன்னை வெட்டல் மேல்த்
தோல் சீவனுலனுளிலே சீவு தெத்து
கால் முதித்த வரல்ல கொம்பு தன்னை வெட்டல மேகாணே.

காமப்கேசரிக் குளிகை.

வைத்தியரே யானைக் கால் சொல்லக் கேளும் மானிலத்தில் பிருடருக்குத் தாது விருத்திக்கு பயிற்று வென சிறு பூனைக் காலி வித்து பார்வளருஞ் சூரி வித்து நீர் முள்ளி

செயித்திடவே முருங்கை வித்து நீர்அமுக்கிரும் வித்து, செம்முள்ளி வித்துடனே நெருஞ்சில் உயித்திருள்ள மத்தின் விதை ஓரிதழியின் வித்து உத்த கஞ்சாவி வித்துடனே அளிஞ்சு வித்து முன் சவுரி வித்துடனே புரச வித்து பத்தென் முசுட்டை வித்துச் சுண்டை திருப்பாலை பரகந்தக் கருவேல் வனி மருது மாவே.

மாவான அகத்தி வித்து நிலப் பனை கிழங்கு வழமான அமுக்கிரும் வேர் நருனீற் பாவின் சமுத்திராப் பழம வாகைப் பிசின் பரிவான முருங்கைப் பிசின் விளாமி பிசின் ஆகும். சேவான வேலம் பிசின், வேப்பம் பிசினோடு சிறுபிலவன் பிசின் சாதிக்காய் பத்திரி தேவான குரோசானி தீ தேத்தான் வித்து தான் முத்தச் சக்கரையுஞ் சீனியாமே.

சீனியொடு கற்கண்டு குந்தி மிக்கம் சிவன் வேம்பு வித்துடனே நெந்ாயுருவி மானிலத் திலிலு வெல்லாம் கொண்டு வந்து வகைக் கழிஞ்சு வீதமடா அய்ரேக செந்தூரம் எனமுடன் கழஞ்சியது சுருத்க்*சிகண்டு*என்*சிசல்வின்: எடுத்துக் கொண்டு என் சொல்வேன். காமப் பூவைக் கழஞ்சி கூட்டி நானிலத்தில் முந்திரிக்கை விட்டு ஆட்டி நாற்பது நாளிகை அரைத்து கடலைப் பிரமாணம் பெய்னே.

என்னவே உருட்டி நிழலில் வைத்துக் கொண்டு இதமான வெள்ளியுட சிமிளில் வைத்துக் கொண்டு கொள்ள தொரு ஆவின் பால் தன்னில் கொள்ளும் அது போகம் ஆயிரம் பேர் நாளொன்று க்கு முன்ன வரும் விந்து விநிதான சிர்சிலேரும் மூதண்டக் குளிகையது காம கேசரியே.

சரியாக இதற்கு இடு ஒன்றுமில்லை. தாது விருத்தியில் விட்டால் சடலம் போச்சு மரியது விந்துவது சிசிலேறி மகத்தான குளிகையது வளமான்ய் பன்னறு அரிதான பங்கையதும் கொண்டு வந்து கொன்டால் ஆயிரம் பேர் சென்றாலும் மடங்காதப்பா. துரிகான ரச குளிகை போலே யாடும். சொர்ணம் போலே தேகமு மாமதுரை மகன் வெள்ளை.

வேளென்ன இதற்கீடோ தம்பனந்தான் என்ன வெகு சுருக்கு வெகு சுருக்கு நளின மெத்த வானென்ற விழியுடைய மடவாரெல்லாம் மையல் கொண்டு பின் தட்ருவார் மருந்து மெத்த ஆளன்ற மென் விதைத்தான் அது போசிக்கில் அடுத்துடனே விந்து விழும். அறிவை மனம் வேரும் தேனென்ற விந்துவது நம்மமே யாரல் செகத்திலுள்ள மாதர்களும் வசமாம் பாரே.

சுரக் குளிகை.

பாரிலுள்ள மனிதருக்கு சுரந்தான் வந்த பரிசது தான் சொல்லுகிறேன். நீரிலுள்ள உயிர் தனே வெய்யிலில் வெதுப்பி விட்டு நிழல் தனி யளித்திட்டு நீர் கொட்டம் விட்டு பாரிலுள்ள மருந்தனை தோலுரித்து பசித்திருக்க அவனுண்ட பாவம் பாவம் சூரியனை நினை யாத தோஷம் தோஷம் சூழ்ந்து தடா சுர தோஷம் சூழ்ந்து தானே. தானென்ற அதின் திறத்தைச் சொல்லக் கேளு. சார்வார் வழி தோரும் தண்ணிப் பந்தல் மானென்ற மாம் நடவு வந்தாவனம் வஸ்திர தனமுடன் குடை செருப்பு மானென்ற கந்தனுக்கு அபிஷேகம் சுத்தான சூரிய நமஸ்காரம் பொங்கல் ஊனென்ற வேதியருக்கு இளநீர் சந்தனங்கள் உதக மெனய் பால் பழங்கள் சர்க்கரையு மியயே.

பீந்த பின்பு சிதம்பரத்தை எழுதிக் கட்டியிடு காட்டில் இளநீர் கண் திறந்து ஆயந்தசுரந்தனக் கவிழ்த்துச் செய்தால் அகலுமடா சுரமென்றது அடங்கலுந்தான் காய சுரந்தான் சன்னி ராசாங்கம் கருதக் கேள். கற்பூரம் ரச செந்திலிங்கம் தோய்ந்த பச்சை நாவியெரு நீர் விஷம் பாஷாணம் தவங்கு மரிதார மொடு கெவுரி தொடில் பய்ந்த பெரிகார மோடு சீனக் க்காரி ப்சுவின் கோரோசனையும் புனுகும் கூட்டே.

கூட்டிய தோர் மருந்தெல்லாம் குமரிச் சாற்றில் கூசாமல் கிளி கட்டி அடிவழித்தும் கொண்டு கூட்டு வாய் யிடைக் கழஞ்சு குளிகல் விட்டு முலைப் பாலிம் ஜாமம் ஒன்று முன்னே ஆண்டு ஆட்டியே வெய்யிலே உலரப் போட்டு சுகமான செம்முள்ளிச் சாற்றுட்டி நாட்டிய சாம மொன்று உரைப் போடு தக்காளிச் சாற்றிலல் அரைத்து போற்றியே உருந்து போல் உருண்டை செய்து புதுச் சட்டி தனில் வைத்து நிழலிலுலர்த்தி ஏத்தியே செப்பு தனில்

அடைத்துக் கொண்டு ஈசுவருக்கு பூசை செய்து இஞ்சிச் சாற்றில் மாற்றியே கொடுத்திடவே சுரமெல்லாம் போம். மகத்தான ன்னி யெல்லாம் மருண்டு போமே.

மருமவே பத்தியத்தைச் சொல்லக் கேளு மைந்தனே. ஆட்டுப் பால் கஞ்சி யாகும். சுருமவேயநீ தக் கஞ்சியிலே அதிமதரம் ஏலம் சுக்கிட்டுக் காய்ச்சியே கொள்ளச் சொல்லும். அருளான சுரக் குளிகை மெத்த வுண்டு ஆச்சரியமிது போலே ஆகாதப்பா.

சன்னிக்கு கோழி முட்டைத் தயிலம்.

இருளான சன்னிக்கு தயில மொன்று இயம்புவேன், கோழி முட்டை என்பது தான் கொண்டே வேண்டியே சென கருவை எடுத்துக் கொண்டு வெள்ளுள்ளி பலம் பத்து தயிலம் வாங்கி ஆண்ட தொரு முட்டையுட தயிலங் கூட மாக்க குழி முட்டையுதயிலம் இறக்கிக் கொண்டு பூண்டதொரு தயிலமெல்லா மொன்று யிட்டு புன முருங்கைப் பட்டையுடன் சிவனார் வேம்பு, வேம்புடனே எருக்கன் வேர் மூன்று விரதக்க் ளித் தியில மிறக்கி கொண்டு பாம்பீநுட கண்ட மொரு வசம்பு கேளு. பலமாகும் வகைதனிதிலே பொடித்துப் போட்டு சோம்பாமல் காய்ச்சி மெழுகு பதந் தன்னில் சுட வைத்துக் காசிடை தாநள்ளுக்கு யீந்து எம்பியே போகமல் பதைப்புத் தோறும் இட்டிடவ விடூமென்ற சன்னி பாதம் வாத மொடு வலியஞ்சு மொக்கப் போச்சு, வையகத்திலே சன்னி யெல்லாம் மாண்டு போச்சு. எதிரிவான வயித்தியந்தான் தயில மொன்று யிட்டுவான் சன்னி வகை தீருமே. தான் ஆதர வாயித் தயிலம் வைத்துக் கொண்டு ஆடலாம் வயித்தியத்துக்கு கர்த்தகை குதரிந்து நாடி கண்டு கர்மந் தீர்த்து சுருதியாய்ச் செய்தவனே, வயித்தியனுமே. நாமொன்று சொல்லுகிரோம். பாண்டு வந்தால் நலமான பாண்டெது செர்ல்லக் கேளு. தாமென்ற தாய் தந்தை மனம் நோகச் செய்தால் தரணியிலுள் வரை வம்பு பேசப் ஆமென்ற உருப் பளித்தல் குரு நித்தித்தல் அசடு விசுவாசமத்துப் பொய்யே சொல்லுதல் வேமென்ற கர்ம மது பித்தம் மீறி ஞெத்ததடா எளப்பு மிஞ்சிக் கை காலெய்வே.

மகா மேகத் தயிலம்.

பாரப்பா சர்வாங்க நேய்களெல்லாம் பாடுகிறேன் மகா மேக திருதம் என்று மகாரப்பா- பேய்ச்சி மிட்டி வேர் பலம் பதான் பத்து, கடுக்காய் நெல்லி வர் தான்றி வேர், வேரப்பா சித்தா மல்லி, பேராமல்லி வில்லே பெறலாமிச்சம் வேரும், பேரப்பா ஞாவல ஊ மாதுளை காஞ்சொரி, பொன் முசுட்டை, நன்னாரி நெய்தல், எண்ணே நெய்தலோடு, செங்கழு நீர் தாமரையு மல்லி நிலப் பனையும் நிலவாகை கண்டங் கத்திரி பொய்யாத வகைக் காரு ந்தான் டோடு பேச்சி மிட்டி வேரோடு பொடித்து மெய்யாத பாண்டத்திலிட்டுக் கொள்ளு யிரு துனி ஜலம் விட்டு எட்டொன்ருக்கி ஆயதுமே கஷாயமது படிதான் நாலு அரைத்து விட்டு ஆவின் நெய் படி தானுலே சாலொடு மன் சிட்டி சாஸ்திர பேதி சதகுப்பை வாய் விளங்கம் தாளிசை பத்திரி சேலான தேவதாரம் நல்ல சந்தனமும், சிறு நாகப் பூ, வொடு மதாம் கோஷ்டம், காலொடு விள குருவை சிங்கு, தேக்கு கருஞ் சீரகம் கஸ்தூரி மஞ்சள், திப்பிலியும் திப்பிலி மூலம் மஞ்சி யொடு கடுகு ரோகணி, நெரிஞ்சிக் காயும் கொஞ்சியே கொத்த மலிவி காக கோரைக் கிழங்கு குரோசாணி வால் மிளகு கடுக்காய் நெல்லி மிஞ்சாதே குங்குமப் பூ மாத ளையின் பிஞ்சு விளங்கவே வகைக்கு நாற்களஞ்சி கூட்டு அஞ்சாதே. ஆவின் பால் நாலு படி தான் சொன்னே அரைத்துமே கரைத்து முன்னேயில் வாரே வாரே நண்டு வூறு சேரே பேழச் சாறு படி தான் ரெண்டு சனி சர்க்கரையது பலந்தான் நாலு காரே நீ நல்லு வெல்லம் பலந் தன் தான் நாலு கரைத்துமே அடுப் பேற்றி எடுத்துக் காய்ச்சி வாரே நீ மெழுகு பதம் தன்னேப் பார்த்து வடித்திடவே. கலசந் தன்னில் கே

தன்னிலே சீரகமும் குரு சாணி கூட்டி தார்வாக வடித்துப் பின் சாத்தக் கேள். நின்மையமாய் கணபதியும், கந்தனையும் பூசை நிலயகச் செய்து நீ நெல் புடத்தில் முன்தாய் முப்பது நாள் வைத்தெடுத்து முரையோடே முரைகளஞ்சு நெய்தான் கொள்ளு சொன்ன தொரு நாளென்றுக்கு இரு நேரங் கொள்ச் சொல்லாதே நோயெல்லாம்

துளைந்து

துளைந்து ஓடிப் போமே. துலைந்தோடு சமமீளை காச பித்தம் சொல்லரிய தலை ஒடுக்கல், கொல் மாருட்டம், ஊலை போகம். உஷ்ன மேகப் பிரமேக மூத்திரக் கிரிச்சியோடு, கல்லடைப்பு, துலைந்தோடும் பெரும்பாடு ரெத்த சயப்பு மனலொரு மேடிலெரிவு, உஷ்ன காந்தி, மலைந்து போம். முசல் வலிப்பு இருமல் ஈளை வாய்வு நீர் சிறப்பு வெட்டை போமென்ற பவள பற்பம் போட்டுக் கொள்ளு பொல்லாத நோய்களெல்லாம் பொடியாய்ப் போகும். தேக மென்ற தோபத்தால் வெந்த நோயும் தீர்ந்து விடும். மலடிக்குப் பிள்ளையுண்டாம். காமென்ற பத்தியந் தான் சாந்தமாய்க் கொள்ளு. கசப் போடு புளிப்பு ரெண்டு தள்ளிப் பாரு. காமென்ற கனை வேகமெல்லாம் தீரும். கை கண்ட வித்தையிது.

மேகப் புண்ணுக்கு மருந்து.

அக்கிரணம் களஞ்சி கட்டி அரிதாரம் சாதிலிங்கம் ரச கற்பூரம், கன்னென்ற கொடிக் கள்ளிப் பட்டைத் தாரு கரு தைலத்தில் உலர்த்திய தூள் கலந்து கூடு விண்ணென்ற வகை, வகைக்குக் களஞ்சி கட்டு. விறகிடு நீதிருகு கன்னி பால் தான் விட்டு

விட்டுரை அரைத்து உலர்த்தி வைத்துக் கொண்டு விதமான புங்கு புலி கனல் ரெண்டொன்றில் விட்டதின் மேல் கண் சிரட்டைப் புகையைக் கொள்ளு. வெடி சூலை மேக வெடி கிரந்தி அரையாப்பு திட்ட மொடு பவுத்திரமும் அளி கன்னிருக்கும் தீரத குழிப்பு புண்ணுந் தீருமே.

சூத பற்பம்.

சுருக்காக சூத பற்பம் சொல்லக் கேளு. சூதமது பலந்தான் கல்வத்திலிட்டு விருக்க முந்திரிகை கொட்டை தயிலம் வாங்கியே தயிலத்தை விட்டு ஆட்ட யிறுக்காக சூத மத சவனை போலாம் எடுத்துமே கல்வத்திலிட்டுக்கு கேளு. மறுக்காது விடந் தீர்ச்சான் மூலிச் சாறும், மால்தை விக்கிழங்குச் சாறுக், கம்பலொடு வகை வகைக்கு ஜாமம் ஆட்டு பாங்காக வில்லை தட்டிக் காய வைத்து அகிலிட்டு மேல் கீழ் மூடி குக்குடமாய் புடம் போட சூதம் நீரும். வதம்பைப் பூ போலாம் பற்பம். ஆத்தாளை பூசை பண்ணி எடுத்துக் கொண்டு பாலென்ற பண விடை தான் நாளொன்றுக்கு பளை வெல்லம் தன்னுடனே பத்தியமாய்க் கொள்ளு. கொள்ளவே ரச பற்பம் வாய் வேகாது. குணமாகும் நோயெல்லாம் கூறக் கேளு. கொள்ளவே சிறந்தி குட்டம், வாய்வு சூலை, கூறரிய அரையாப்பு, குன்ம மெட்டும் மெல்லவே நோயெல்லாம் ஓடிப் போகும். விருது சொல்லி வைத்தியத்தை விரைந்து பாரு. உள்ளபடி சூத பற்பம் சொல்லிப் போட்டேன். உத்தமனே தங்க மென்ற தாயைச் சேர்த்து கன்ன மில்லா நவலோக பத்துக்கு இரண்டு காட்டிடி இவை மாத்தாரு கனகமாகும்.

பாஷாணக் கட்டு.

குருமுழுமு கனகமாம் வெள்ளைப் பாஷாணம் கட்டுதற்கு சூட்ச மாங் கருவைக் கேளு. கனகமாம் பாஷாணக் கட்டி வாங்கி கருதியே வெள்ளாவி வேரும் போது வசன மாம், வெள்ளாவி சீலை நடு வைத்து வாங்கிடவே வெள்ளை சுக்கு சித்தியாகும். சுணங்காதே பிராயம் பட்டைத் தயிலம் வங்கிச் சுருகிடவே கடிகை அதில் சத்தியாமே. சுத்தியாம் வெள்ளருகு சவுக்காரம் வெல்லஞ்சு சுகமாக ரேசித்து அரைத்து கொண்டு புத்தியாய் பாஷாணம் கட்டி மேலே பொதிந்து ந. தாம்பிரக் குகையில் வைத்து சத்தி யாம் மேலு மந்த சில்லால் மூடி சீலை செய்து குக்கிட மாம்புடத்தைப் பேட்டு புத்தியாய்த் தேவி பதம் பணிந்து போத்து புகையாது பாஷாணம் கட்டிப் போமே. கட்டிடு உருகியது மணி போலாகும். கசடற்ற செம்பிலே பத்துக் இரண்டு யிடவே வெள்ளியம். மெழுகு செய்ய முறையைக் கேளு முள் பன்றி நெய்யை வாங்கி கட்டியே வென் க்ருவு சதுரக கன்னிப் பாலும் சார் கச்சில் மாகும் தன்னை வாங்க கட்டியே முள் பன்றி நெய் போட்டு கலந்து பேரம் பாஷாணங் கரண்டியிலே வைத்து மூட்டியே ஒரு சாமம் சுருக்கு போட்டு மெழுகாகும். பூஞ்ச ஏன்னி எடுத்துக் கொண்டு எடுத்து போவதை யிட்டால் பனிரெண்டு மாத்து கூட்டியே வெகு தூரம் ஓடும் பாரு.

எடுத்தருமே வத மென்ன வயித்தியத்தைப் பாரு. என் மக்கள் மோக்ஷ கெதிக்கிட மாம்பாரு. அடுத்துமே க்ட்டியைக் கேள். பாஷாணந் தன்னில் அநுபானம் சுதகங்கள் கஷாயந் தன்னில் கொடுத்திடயே சுரம் என்பதும், தோஷம் எட்டும் ஓடிப் போம். வாத சன்னி 96, அடுத் மேகிட்டாது ஓடிப் போகும். அரையிரேன பஷாணங் கதிகங் காணே.

சாதிலிங்கக் கட்டு.

காலென்ற சாதிலிங்கக் கட்டைக் கேளு. கருதியே நெடுங் கம்பி லிங்கம் வாங்கி பாலென்ற ஆயக் கரண்டியிலிட்டு பழச்சாறும் முரைப் பாலும் சுருக்குத் தாக்கு- கோனென்ற ஒரு சாமம் கருத்தக்*தாகு* சுக்குத் தாக்கு. கொம்புத் தேன் ஒரு ஜாமம் சுருக்குத் தாக்கு. ஏனென்ற லிங்கமது கடிசை சுத்தி எடுத்து மரு அயக் கரண்டி தன்னில் வையே. அய்த்துமே அயிவிரலை பரு பாகல் சாறு வகைக்கு ஒரு ஜாமம் சுருக்குப் போடு அய்த்து அறப் பொடியை பழச் சாறு விட்டு அரைத்து அந்த லிங்கத்தின் மேலே பூசி உய்த்து மேய்க்கு மட்டிக் காய்க் குள் வைத்து ஒரு புடந் தனெட்டு எடுக்க முழுக் கட்டாச் சுதைத்றுமே சன்னி சுர தோஷ மெல்லாம் சன்னுமே 96 வாதம் செத்து மேத்துக்கு செய்ய வேனறு மென்றுல் செவ்வகத்திப் பூப் பட்டை யிடித்து வாங்கி பைத்து மே மன்றியுட நெய்யுங் கூட்டிப் பாங்காகா சுருக்கிடவே மெழுகு மாகும். மெழுகெடுத்து நவ லோகந் தன்னிலிய் பத்தரையே மாத்துக் கானவும் தருக் கெடுத்த மெழுகி லொரு பணந் தான் தேனில் சன்னி சுரம் 96-க்கும் போகும்.

அரிதாரக் கட்டு.

தெளிவான அரிதாரந் தன்னை வாங்கி தேசினீர் சுண்ணாம்பிலே சுத்தி எளிதான ஒட்டிலிட்டு இரு சாமம் கரந்தைச் சாரு தாக்கி தாக்கிடவே அரிதரங் கூட்டிப் போகும். சன்னி சுரம் தோஷமொடு க்ஷய மீளை காசம் செவிக்குடவே அரையாப்புக்கிறந்தி அழு கன்னிச் சூலை யொடு பதினெட்டுக் குட்டம், வாய்வுயோடும் தாக்கிடவே, செந்தூரம் செய்யக் கேளு, சத்தி நெடுஞ் சாரணை வேர் குக்கிலிரண்டு ஆக்கிடவே முருக்கிலைச் சார் வாய் ந் நாலு மரைத்துமே மால் தேவிக் கங்கி முட்டி போகான மண் சீலை எழு பொதிந்துமே குக்குடத்தில் வாங்கே போட்டு வாங்கே- ஊக்கு*போட்டெடுக்க செந் தூரம் அருணின் போலாம். புகட்டவே நவ லோகம் பத்து, மாத்து பாட்டெடுத்து நாளொன்றுக்கு அநு பானத்தில் பண விடை தான் மண்டலங் கொண்டாயானால் சுட்டெடுத்து நோயெல்லாம் ஓடிப் போகும். காய சித்தியாகும்.

எல்லா குன்மத்துக்கும் மருந்து.

எல்லாக் குன்மத்துக்கும் அரைப் பொடி ஐங்கழஞ்சி மனோசிலை இரண்டு கழஞ்சி கெந்தகம் இரண்டு கழஞ்சு, ரசமொரு கழஞ்சி இந்தப் படி கழஞ்சு, நிறையாகக் கூட்டி கற்றாழை நீர் விட்டு ஒரு ஜாமம் மைபோலயரைத்து கல்வத்திலே யிட்டு வெய்யிலிலே வைக்கப் பற்பமாகும். அதை எடுத்துக் கொண்டுஇந்துப்பு இரண்டு பங்கு திப்பிலி, சுக்கு மிளகு மூன்று இரண்டு பங்கு முந்தின பற்பத்துடனே கூட்டி கடுக்காய் பொடி சீலை வடி கொண்டு இது மூன்று பங்கும் இது சேர் ஒன்றாக் கூட்டிக் கையாந்தக் கரைச் சாற்றில் ஒரு நாளரைத்து ஒரு விராகனிடையிலே குளிகை பண்ணி இஞ்சிச் சாற்றில் பஞ்ச கோசலத்தில் கஷாய மிட்டுக் கொடுக்கவும். சகல குன்மமும் தீரும். அக்கினி மாந்தம் பீலிகை குஷ்டம் தீரும். வியாதிகளுக்கு அநுபானத்திலிடவும். குடி நீர்வைத்து ராத்திரிக்கு கொடுக்கவும். ஆயப் பட்டை சாரணை வேர், கொடி வேலி வேர், புங்கம் பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கடுக்காய் இவை கஷாய மிட்டு ராத்திரியில் கொடுக் கவும். எல்லா வியாதியும் தீரும்.

சன்னிக்கு குளிகை.

சாற்புந் திப்பிலி வெண் காரம் சதுரம் நாவி மிளகுடனே
ஒற்ற லிங்கம் சமன் கூட்டி இவை நிம்பச் சாறு தன்னிலரைத்து
வாய்த்த குன்றியிடைக் குளிகை மருவு மிஞ்சிச் சாற்றிலிட
பூத்தடங் கண் முலை மயிலே பொருந்துஞ் சன்னிகள் போயிடுமே.

குளிர் சுரத்துக்கு கஷாயம்.

ஆடாதோடை பய்ப்புடல். ஞ்சீந்தில் பற்படாகம்
நீடா கண்டங் கத்திரி வேர் நில வேம்புடனை நிரை சுக்கு
வாடா முடி நர் தேன் விட்டு வடித்துப்பு கூட்டி குடிப்பீரகில்
கோடா கோடி விக்கலுடன் குளிர் ஜீரமும் போய் விடுமே.

பித்த சுரத்துக்கு கஷாயம்.

கொத்தமல்லி கூவிளங்கு ரைந்த முட்டி நெல்ப் பொரி
வத்தல் சுக்கு முத்தமும் வடித்து நீர் குடிப்பீருல்
பித்த சுரமானதும் பிரட்டெழுந்த தாகமுஞ்
சத்தி விக்கலுந் தவிர்ந்து போகு மான்பரே.

அதி சார சுரத்துக்கு கஷாயம்.

சுக்கு கிராந்திஅதிவிடையம் சொல்லுஞ் சீந்தி வேருடனே
மிகக் மாதளை விடப் பாலை வில்வ பெரு மரத்துப் பட்டை
தக்களஞ்சி யொன்றுக்கி சார்ந்த நீரைக் கொள்வீருல்
விக்கல் சுரம் அதிசாரம் வெதுப்பும் கடுப்பும் ஞூனமாமே.

சுரம் 64-க்கும் கஷாயம்.

ஞேளப்பா சுரமென்ற தெல்லாம் தீர கஷாய மொன்று தா தூவளையுங் கண்டங் கத்திரி
சூளப்பா நில வேம்பு விஷ்ணு காந்தி சுகமான முசுக்கை பேய்ப் புடலும் கூட்டில்
நாளப்பா பற்படகஞ் சிந்தி தண்டு நன்றான வேம்பின் தோல் முத்தக் காசு
வாளப்பா தும்பை செந் தொட்டி தோடை மாதுளை நாய்த் துளசி சிற்று முட்டி வேரே
வேரப்பா வகை வகைக்கு விராகன் பத்து விதமான தாளிசை பத்திரியுந் தேக்கு
பாரப்பா சிற்றரத்தை நறுக்கு மூலம் பண்பான திப்பிலியோடொவ் வொன்றுக்கு
சேரப்பா விராகனிடை மூன்று கூட்டித் திறமாக யிடித்தாரு பங்கு செய்து.

கூறப்பா ஒன்றுக்கு மூன்று. நாழி ஞூமான சலம் விட்டு எட்டொன்றுக்கோ
ஆக்கியே குடித்திடு நீ யிந்தப் பாகம் அந்தி சந்தி மூன்று நாள் குடிக்கு முன்னே
யோக்கி விடுஞ் சுரங்களருபத்து நாலும் பொல்லாத சன்னி வகை தோஷ மெல்லாம்
தேக்கியே பித்த மொடு வாய்வு சீதம். திரமான மெய் வருத்தம் கடைச்சல் குத்தல்
ஊக்கியே ஓடி விடும் நோய்கள் எல்லாம் உண்மையாய்ச் சொல்லி விட்டேன் உறுதி தானே.

விக்கலுக்கு மருந்து.

நெய்ய முலைப் பாலும் நேர்ந்த விளக் கெண்ணெயு மாம்
மையனையும் பூங்குழலே மத்தித்து கையதனல்
பஞ்சு தனி லூட்டிப் பதமாக நெஞ்சி விட
மிஞ்சி வரும் விக்கல் போம் விண்.

எழுதப்பட்டது:- கே.ஆர்.சீனிவாசயங்கார்.

சு.ச.26.7.62 ******